[27th July 1957

Sri A. VEDARATHNAM PILLAI : கரும்பு சாகுபடி நெல் விளைச்சலை பாதிப்பது தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் தானு ? அல்லது இதர ஜில்லாக்களிலும் இந்த மாதிரி பாதிக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கரும்புச் சாகுபடி நெல் விளைச்சலை பாதிக்கவில்லையென்று தான் சொன்னேன். இதனுல் இந்தக் கேள்வி எழுவதற்கே இடமில்லை.

Sri K. ANBAZHAGAN : ஆரூரான் சர்க்கரை ஆலை ஆரம்பித்ததற்குப் பின்னர் நெல் விளைந்த பல பகுதிகளை கரும்பு சாகுபடிக்கு மாற்றுகிருர்கள். மேலும் சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது. இதனுல் இன்னும் பல நெல் விளையும் பகுதிகள் கரும்புக்கு மாற்றப்படும். இதை சர்க்கார் வரவேற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி இன்னும் சில ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நெல் பயிரிலிருந்து கரும்புக்கு மாற்றப்படுவதில சர்க்கார் கவலைப்படவில்லை. கரும்புப் பொருளும் நமக்கு வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கும் விவசாயம் கட்டுபடியாகவேண்டுமென்றுல் நெல் பயிரையே வைத்துக்கொண்டிருந்தால் பலன் அளிக்காது. அப்போதைக்கப் போது ரொடேஷன் ஆப் கிராப்ஸ் வேண்டும். கரும்பு சாகுபடி செய்வதை வரவேற்கிருேம்.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : நெல் விளையக்கூடிய நஞ்சை நிலத்தில் தான் கரும்பு விளைவிக்கமுடியுமென்று அமைச்சருக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுவும் தெரியும். இதில் இவ்வளவு கவலை கொள்ளாமல் இருக்கக்கூடிய நிலங்களின் பேரில் இன்னும் கவனம் செலுத்தினுல் விளைச்சலை இரட்டிப்பாக்கலாம். கரும்பு உற்பத்தி யாவதைப் பற்றி அங்கத்தினர் கவலை கொள்ளவேண்டாமென்று தான் சொல்லுகிறேன்.

List of successful graduate and non-graduate teachers.

Mr. SPEAKER : As the hon. Member Sri M. William is not in his place, the question No. 301 and answer will be printed in the proceedings.

* 301 Q.—Sri M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state weather the Government have received the lists of successful graduate and non-graduate teachers selected by the former Travancore-Cochine State Public Service Commission?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir.

Scaling down of the sales-tax.

* 302 Q.—Sri T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received any instructions from the Union Food Minister or from the Central Government regarding the scaling down of the sales tax on food articles; and

(b) if so, the details of the instructions and the action taken in pursuance thereof?